01.02.2025

அ.வ.எண். 1071/2017, 160/2021 மற்றும் 8/2021

பி.வாசா.1 - சக்திகுமார் என்கிற விஜயராகவன்

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள கையொப்பம் மாரப்ப கவுண்டருடையது என்பதை என்னால் ஊர்ஜீதம் செய்ய முடியுமா என்றால் முடியும். பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் என்னுடைய தகப்பனாரும், தனபாலுடைய தகப்பனாரும் GUARDIAN ஆக செயல்பட சொல்லி எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.7 ஆவணம் நானும் என் சகோதரர் தனபாலும் மைனராக இருந்த நிலையில் எழுதப்பட்டுள்ளது, அதன் பின்னிட்டு நாங்கள் மேஜரான பின்னிட்டு அந்த பி.வா.ச.ஆ.7 ஆவணத்தை எங்களிடம் எந்த தேதியில் ஒப்படைக்கப்பட்டது என்ற சங்கதியை நான் என்னுடைய எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் ஆமாம். அ.வ.எண்.1071/2017 ல் என் தாயார் 1 ம் பிரதிவாதி. பி.வா.சா.ஆ.8 சமரச தீர்ப்பில் எனக்கு உயில் ஆவணப்படி சொத்து வருகிறது என்றும், அந்த உயில் எழுதிய நபருக்கு எந்த ஆவணத்தின் கீழ் சொத்து வந்தது பற்றியும் குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

நான் பி.காம் வரை படித்திருந்தும் எனக்கு மேற்படி பி.வா.சா.ஆ.8 தீர்ப்பில் உள்ள சங்கதிகள் நன்கு தெரிந்திருந்தும் இந்த வழக்கிற்காக நான் மறைத்து தெரியவில்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சமரச மனுவில் எந்த ஆவணத்தின் கீழ் எங்களுக்கு சொத்து பாத்தியம் என்று நான் குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரியல்ல. அதில் உயில் ஆவணம் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் வேறு எந்த முன்கிரய பத்திரங்களும் எழுதப்படவில்லை என்றால் ஆமாம். நான் குறிப்பிட்ட உயில் ஆவணமும் தற்போது சொல்லும் கிரய பத்திரமும் நான் பி.வா.சா.ஆ.8 வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும் அதை நீதிமன்றம் கருத்தில் எடுத்து நீதிமன்றம் பரிசீலனை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மாரப்ப கவுண்டரின் வாரிசுகள் உயிலை ஆட்சேபணை செய்யவில்லை என்று எந்த வாசகமும் பி.வா.சா.ஆ.8 ல் இல்லை என்றால் சரியல்ல. என் அத்தைகள் மற்றும் இதர வாரிசுகள் உயிலை ஆட்சேபணை செய்யவில்லை என்று எந்த குறிப்பாணையும் பி.வா.சா.ஆ.8 வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 வழக்கில் என் அத்தைகள் தரப்பினர்கள் இல்லை. பி.வா.சா.ஆ.7 ஆவணம் மேற்படி 1071/2017 வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணம் என்பதால் தான் அதை நான் பி.வா.சா.ஆ.8 வழக்கில் தாக்கல் செய்யாமல் தவிர்த்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.8 சமரச தீர்ப்பாணை வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

ஆதியில் RSR-படி சக்கரதேவர் மற்றும் மூவர் பெயரில் பட்டா உள்ளது என்றால் ஆமாம். 614/1 காலையின் மொத்த விஸ்தீரணம் 16 ஏக்கர் என்றால் இருக்கலாம். வாதிகளின் வழக்குபடி 1914 ஆண்டு 3 கிரய ஆவணங்களின் 8 ஏக்கர் கட்டுப்பட்டுள்ளது என்றால் இல்லை. 1934 ம் கிரய பத்திரத்தின் படி 614/1 காலையில் 8 ஏக்கர் சென்னிமலை கவுண்டர் வகையறாவிற்கு செல்கிறது என்றால் சரிதான். 1934 உட்பிரிவு படி 614/1A வில் சென்னிமலை கவுண்டருக்கு 2.65 ஏக்கரும், 614/1C-இல் சென்னிமலை கவுண்டரின் சகோதரரான மாரப்ப கவுண்டருக்கு 2.65 ஏக்க்ரும், அவருடைய சகேதரர் ராயப்ப கவுண்டருக்கு 614/1D யில் 2.70 ஏக்கரும் மொத்தம் 8 ஏக்கரும் அவர்களுக்குள் உட்பிரிவாகியுள்ளது என்றால் சரியல்ல. இது பொறுத்து வாதி தரப்பில் 2ம் சாட்சியாக துணை வட்டாட்சியர் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்றால் ஆமாம்.

614/1D க்கு தென்புறம் 614/1E க்கு வடபுறம் சண்முகம், தெய்வாத்தாள், சுந்தராம்பாள் ஆகியோர் 2012ல் 4 ஏக்கர் பொறுத்து உருவாக்கப்பட்ட பாகப்பிரிவினை படி நான்கு நபர்களும் பாகம் செய்துகொண்டதாக ஆவணம் உள்ளது என்றால் அவர்கள் 1936 ஆவணத்தின் கீழ் 2012 ல் பாகம் செய்து கொண்டனர். மேற்படி சட்டத்திற்கு புறம்பாக ஏற்பட்ட பாகப்பிரிவினையின் கீழ்

614/1E காலையில் தென்புறம் 4 ஏக்கரில், தற்போது வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு அதில்  பல்வேறு நபர்கள் குடியிருக்கிறார்கள் என்றால் ஆமாம், ஆனால் அது முறையாக ஏற்பட்ட பாகப்பிரிவினை. மேற்படி பாகப்பிரிவினை செல்லாது என்று தான் வாதி 1071/2017 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். மேற்படி 614/1A மற்றும் 614/1C, மற்றும் 1D, காலையில் 8 ஏக்கர் போக மீதம் 4 ஏக்கர் வாதிகள் விற்பனை செய்தது போக மீதமிருந்த 614/1E, ல் இருந்த 4 ஏக்கருக்கு தான் இந்த வாதி 1071/2017 என்ற வழக்கை மேற்படி பாகப்பிரிவினை செய்து கொண்ட நபர்கள் மீது தாக்கல் செய்துவிட்டதால் அதை மோசடி செய்தனர் என்று நான் பி.வா.சா.ஆ.7 ஆவணத்தை தயார் செய்து பி.வா.ச.ஆ.8 தீர்ப்பை நீதிமன்றத்தை ஏமாற்றி பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

சக்கரைத்ததேவர் மற்றும் மூவர் வகையறா 4 கிரய ஆவணங்களின் கீழ் 1934 வரை அவர்களது மொத்த 16 எக்கரையும் விற்பனை செய்துவிட்டனர் என்றும், அதன் பின்னிட்டு அவர்கள் உரிமை இல்லாமல் 1936 அல்லது அதற்கு பின்னிட்டு அவர்கள் ஏற்படுத்தி கொண்ட எந்த ஆவணமும் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. மேற்படி மாரப்ப கவுண்டர் சென்னிமலை கவுண்டருக்கு பாத்தியப்பட்ட 614/1A மற்றும் 614/1C, மற்றும் 1D, ஆகிய காலைகளை 1819/1962 பாகப்பிரிவினை படி அவர்கள் பிரித்துகொண்டனர் என்றும், சொன்னால் சரியல்ல. மேற்படி 1962 பாகப்பிரிவினை பத்திரம் தவறானது என்று இதுநாள் வரை எந்த பரிகாரமும் நான் கேட்கவில்லை என்றால் ஆமாம். சுந்தாரம்பாள் வகையறா 614/1E காலையில் தங்களுக்கு சொத்து பாத்தியம் என காட்டுவதற்கு 2012 ம் வருடத்திற்கு முன்னிட்ட ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். வாதிகளுக்கு தெரியாமல் சுப்பாத்தாள் வகையறா பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தியது வாதிகளுக்கு 2014 ல் தெரியவந்து உடனடியாக 1071/2017 என்ற வழக்கை COIMBATORE MUNSIF COURT-இல் தாக்கல் செய்தார் என்றால் ஆமாம்.

சண்முகம், தெய்வாத்தாள் வகையறா 1934 முதல் 2012 வரை எந்த வருவாய் துறை ஆவணங்களும் அவர்களது அனுபவத்தை காட்ட தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நான் மைனராக இருந்தபோது பி.வா.சா.ஆ.7 ஆவணத்தை வைத்து எனது பெயரில் எந்த வருவாய் துறை ஆவணங்களும் மாற்றவில்லை. 2007 ம் ஆண்டில் நான் மேஜரான பின்னிட்டு பி.வா.சா.ஆ.8 வழக்கு தாக்கல் செய்யும் வரை எனது பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் உயில் அடிப்படையில் மாற்றவில்லை என்றால் ஆமாம். 1934 ற்கு பின்னிட்டு சுப்பாத்தாள் வகையறா பெயரில் எந்த வருவாய் துறை ஆவணங்களும் இலலாத நிலையில் 2012 ல் மோசடியாக பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தி அவர்கள் பெயரை வருவாய் துறை ஆவணத்தில் பெயர் மாற்றம் செய்தும், என்னுடைய பெயரில் உயில் ஆவணம் ஏற்படுத்தி அதே சொத்திற்கு பி.வா.சா.ஆ-8 வழக்கை தாக்கல் செய்து நானும், என் பெயரில் பட்டா மாற்றம் செய்துள்ளேன் என்றும் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-8 தீர்ப்பிற்கு பின்னிட்டு நான் எனது பெயரை பட்டாவில் பெயர் மாற்றம் செய்ததை வாதிகள் RDO மூலம் மனு கொடுத்து நீக்கி விட்டனர் என்றால் ஆமாம். தற்போது DRO கோர்ட்டில் மேல்முறையீடு நிலுவையில் உள்ளது. ஆர்.டி.ஓ கோர்ட்டில் நிலுவையில் இருந்போது நான் உயர்நீதிமன்றத்தில் WRIT PETITION தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். அந்த WRIT PETITION இல் 2ம் எதிர் மனுதாரர் உரிய தரப்பினர்களுக்கு வாய்ப்பு வழங்கி நடைமுறையை தொடர உத்தரவிட்டு உத்தரவானது என்றால் ஆமாம். அதற்கு பின்னிட்டு தான் RDO உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.9 படி பட்டா, சிட்டாவில் உள்ள விவரப்படி எனது பெயர் நீக்கப்பட்டுவிட்டது என்றால் ஆமாம். சண்முகம் வகையறா ஏற்படுத்தி பாகப்பிரிவினை ஆவணத்தின் உள்ள சொத்துக்களில் நான் தாக்கல் செய்துள்ள 379/2016 வழக்கில் உள்ள உயில் ஆவணத்தில் உள்ள சொத்து விவரமும் ஒன்று என்றும், மேற்படி பாகப்பிரிவினை ஆவணம் செல்லாது என்று ஏற்கனவே வழக்கு

தாக்கல் செய்துள்ளதால் பின்னிட்டு உயில் ஆவணம் மோசடியாக ஏற்படுத்தி நான் மோசடியான தீர்ப்பு பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய சகேதரியின் கணவர் இந்நீதிமனறத்தில் நான் சாட்சியம் அளிக்கும்போதெல்லாம் அவர் என்னுடன் வருகிறார் என்றால் ஆமாம், இன்றும் அவர் வந்துள்ளார், அவருக்கு அ.வ.எண்.855/2017 என்ற வழக்கு உள்ளதால் அவர் வருகிறார். இன்றைய தேதியில் அந்த வழக்கு வாய்தா இல்லை.

இந்த வழக்கு நடைமுறையில் என்னுடைய கோவிந்தசாமி என்கிற நபரும் வருவார் என்றால் இல்லை. வாதி தரப்பு சாட்சிகளை விசாரணை செய்யும்போது என்னுடைய இந்த வழக்கிற்கு வந்து ஆஜரானார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் பி.வா.சா.ஆ.8 தீர்ப்பை பதிவு செய்த நகல் என்றால் ஆமாம். அந்த ஆவணம் வா.சா.ஆ-34 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் குறுக்குவிசாரணையை தொடர்ச்சிக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/சக்திகுமார் (எ) விஜயராகவன்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur